# மெட்ரோ ரயில் நிலையங்களில் 5 நாள் இலவச மருத்துவ முகாம்

சென்னை, பிப். 23: மெட்ரோ ரயில் நிலையங்களில் நாளை முதல் 28ம் தேதி வரையில் 5 நாட்கள் இலவச மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிவிப்பு: சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து மெட்ரோ ரயில் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாமை நாளை முதல் பிப்ரவரி 28ம் தேதி வரை நடத்துகிறது. சென்ட்ரல், ஏஜி டி.எம்.எஸ், சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி, திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் கோபுரம் மற்றும் செனாய் நகர் ஆகிய 12 மெட்ரோ ரயில் நிலையங்களில் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் மருத்துவ முகாம் நடைபெறுகிறது. இந்த இலவச மருத்துவ முகாமில் இரத்த அழுத்தம், சீரற்ற ரத்த சர்க்கரை குறித்த ஆலோசனைகள் வழங்கப்படும். மெட்ரோ ரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்திக்கொள்ளலாம்.